# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) 2008 / 2009 HELD IN AUGUST - 2009

## PSC 2.15 – INTRODUCTION TO INTERNATIONAL RELATIONS

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. "அரசுகளுக்கிடையிலான உறவுகளே சர்வதேச உறவுகளாகும்." தற்கால சர்வதேச உறவுகளின் தன்மையையும், போக்கினையும் விளக்குவதற்கு இக்கூற்று பொருத்தமானது என நீர் கருதுகின்றீரா? உமது விடைக்கான நியாயங்களைத் தருக.

02. சர்வதேச உறவுகளைக் கற்பதற்கு பயன்படுத்தப்படும் யதார்த்தவாத மற்றும் இலட்சியவாத அணுகுமுறைகளுக்கிடையிலான வேறுபாட்டை நீர் எவ்வாறு விளக்குவீர்?

03. தற்கால சர்வதேச முறைமையின் வளர்ச்சி குறித்து பின்வரும் காலகட்டங்களுள் இரண்டை (02) ஆராய்க.

(அ) 1ம் கட்டம் (1600 – 1760)
(ஆ) 2ம் கட்டம் (1760 – 1871)
(இ) 3ம் கட்டம் (1871 – 1914)
(ஈ) 4ம் கட்டம் (1914 – 1939)

04. தேசிய அதிகாரம் என்பதன் பொருள் என்ன? அரசுகளின் தேசிய அதிகாரத்தை நிர்ணயிக்கும் பிரதான காரணிகள் சர்வதேச உறவுகளில் தாக்கத்தைச் செலுத்த வாய்ப்பளிக்கும் விதம் குறித்து சுருக்கமாக பரிசீலிக்குக.

05. (அ) அதிகாரச் சமநிலை என்றால் என்ன?

(ஆ) இணக்கநிலை (Détente) உறவுகள் குறித்து சுருக்கமாக ஆராய்க.

06. "இரண்டாம் உலகப் போருடன் ஐரோப்பிய பல்துருவ முறைமை (European Multi Polar System) வீழ்ச்சியுற்றமையினால் உலக வலுச் சமநிலையில் இருதுருவ முறைமை (Bipolar System) எழுச்சி பெற்றது" இக்கூற்றின் உண்மைத் தன்மையை மதிப்பிடுக..

07. "சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சிக்குப் பின்னரான புதிய உலக ஒழுங்கு (New World Order) ஒரு பல்துருவ அதிகாரச் சமநிலையை நோக்கி நகர்கின்றது" பரிசீலிக்குக.

08. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பெழுதுக.

(அ) கெடுபிடி யுத்தம் (Cold War)
(ஆ) பூகோளப் பொருளாதாரம்
(இ) யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையின் சர்வதேச உறவுகள்
(ஈ) ஆசிய வல்லரசாக சீனா